ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்யதர்மம்.

तृष्णां छिन्दि भज क्षमां जहि मदं पापे रतिं माकृथाः
सत्यं ब्रूह्यनुयाहि साधुपदवीं सेवस्व विद्वज्जनम्।
मान्यान्मानय विद्विषोऽप्यनुनय प्रख्यापय प्रश्रयम्
कीर्तिं पालय दुःखिते कुरु दयामेतत्सतां चेष्टितम्॥

ஆசையை விலக்கு பொறுமையைக் கைவிடாதே. அகங்காரத்தை விட்டுவிடு பாபத்தில் விருப்பம் கூடாது. உண்மையையே பேசவேண்டும். பெரியோர்கள் செல்லும் மார்க்கத்தை அநுஸரித்துப்போ. பண்டிதர்களை ஸேவிக்க வேண்டும். தாய் தந்தை குரு முதலியவர்களைப் பூஜை செய். சத்துருவாயிருந்தாலும் அநுஸரிக்கவேண்டும். மரியாதையுடையவன் என்கிற பெயரை பிரஸித்தி செய். சிறந்த கீர்த்தியை விருத்தியடையும்படி செய்து ரக்ஷிக்க வேண்டும். கஷ்டத்தையடைந்த பிராணிகளிடத்தில் கருணை பாராட்டு. இவ்விதமிருப்பின் இதுவே மஹான்களுடைய நடத்தையாகும்.

மானிடப் பிறவியையடைந்தவர்களுக்கு எப்பொழுதும் விலக்க வேண்டியவைகளையும் விடாமல் அநுஷ்டிக்கவேண்டியவைகளையும் விபரமாயறிவிக்கிறார். எவ்விதத் துன்பங்களுக்கும் முக்கிய ஸாதனமாயிருப்பது ஆசையென்பதே. இதை ஒழிப்பதாலேயே சகல சிரேயஸ்ஸையும் சுலபமாய்ப் பெறலாமெனக்கருதி முதலில் அதை விலக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமே அகங்காரம் பாபம் முதலியவைகளையும் நீக்கவேண்டுமென்றும் க்ஷமை ஸத்தியம் சாஸ்திரீயமான சிறந்த மார்க்கம், வித்வான்களின் ஸேவை, பெரியோர்களின் பூஜை, சத்துருக்களை அநுசரிப்பது, யாரிடத்திலும் மரியாதையாயிருப்பது, கீர்த்தியைப்பாதுகாத்தல், பிறர் துக்கத்தை நம்மாலியன்றவரையில் பரிஹரிப்பது முதலிய காரியங்களை தவறாமல் அநுஷ்டிக்கவேண்டும். இங்கு கூறப்பட்ட விஷயங்களை ஒருவன் சரியாய் நடத்திவருவானாகில் அதுவே சாஸ்திரங்களில் நன்கு பயிற்சியடைந்து அவ்விதமே அநுஷ்டிக்கும் அறிஞர்களுடைய நடத்தையாகும். ஆகையால் இந்தவிஷயத்தில் நாம் அநாதரவாயில்லாமல் சிரத்தையுடன் எப்போதும் கவனித்து அநுஷ்டிக்கவேண்டும்.

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-ஹு ஆனி-மீ ௧௪௳

ஸம்ஸ்கிருத பாஷாபி விருத்தி

உலகின்கண் மனிதர்கள் கருத்தை எளிதில் வெளியிடுவதற்கு பல்வேறு பாஷைகளிருப்பினும் அவற்றுள் சிறந்ததும் தெய்வீகத்தன்மை பொருந்தியதுமான ஸ்ம்ஸ்கிருதமே நாம் பாஷையினால் அடையவேண்டிய பலன்களனைத்துக்கும் ஸாதனமான அம்சங்கள் நான்கையும் செவ்வனே பெற்றுள்ளது. நாம் அறியக்கூடிய பொருள்களனைத்தையும் தெளிவுறவுணர்த்தும் வல்லமைபெற்ற சொற்களுள்ளதும் (இவைகளே இலக்கியமெனப்படுவன), காலதேசங்கள் வேறுபடினும் முன்னோ வழக்கத்துக்கிணங்கி அவர்எழுதிய புஸ்தகங்களைப்படிக்கவும் அதன் கருத்தையறியவும் பாஷை வேறுபடாதிருத்தல் வேண்டுமென அதற்கேற்ப இலக்கணத்துடன் கூடியதும் (அதுவே இயலெனப்படும்), இம்மை மறுமை சுகங்களுக்கு சாதனங்களான விஞ்ஞான நூற்களையும் ஸம்ஸாரதுக்கம் நீங்கிப் பேரானந்தமடைவதற்குரிய மெய்பொருளை நன்குவிளக்கும் ஞான நூற்களையும் ஒருங்கே பெற்றதுமான பாஷை வடமொழியேயாகும். இவைகளிப் பாஷையிலுள்ளதுபோல் மற்றவைகளில்லாததுபற்றி இதனைக் கற்றுணர்ந்த கல்விமான்கள் இப்பாஷைக்கு நிகர் உண்டென சொல்லத்துணியார். நம் தேசத்தில் வழங்கும் பாஷைகளெல்லாம் இப்பாஷையின் பதங்களைப் பெற்றே மிகவும் பிரகாசிக்கின்றன. மற்றெந்தபாஷையிலும் இவ்வடமொழியிலுள்ளதுபோற் சிருங்காரம் முதலிய ரசங்கள் ஒன்பதும் நிறைந்து பெயர் கேட்குமுன்னரே அதிலுள்ள பற்பல விஷயங்களையூகிக்கத்தக்க நாடகம் பிரகாணம்முதலிய அனேக

வேற்றுமை நிறைந்த காவியங்கள்(இலக்கியங்கள்)செம்பொருள் ஆகுபொருள் குறிப்புப்பொருள் எனப்பல்வேறு பொருள்களையு ணர்த்துவதும்ரசங்களுக்குரியஎழுத்துக்கள்,யாப்புகளுக்கேற்ப ஒருபொருள் கொடுக்கத்தக்க சிறிதும்பெரிதுமான(புசங்கமம், புசங்கம், புசகம், சிவன், சங்கரன்)வடிவங்கள் கொண்டதுமான சொற்கள் மிகுதியாகக்கிடையா. ஆயினும்,மற்றும் சிலபாஷைக ளிலுள்ளதுபோல், அடிக்கடி மாற்றமின்றி ஒரேரூபமாய் பல்லா யிரம் ஆண்டுகளாக ஆன்றோர் வழிவழுவாது, ஸ்ரீபாணினிமுனி வர் முதலிய புனிதர்களாலியற்றப்பட்ட பதவிலக்கணம், ரஸவி லக்கணம், எழுத்திலக்கணம், பொருளிலக்கணம் முதலிய பற் பல விலக்கணங்களும், சோதிடம், வைத்தியம், கற்பம், மந்தி ரம், யோகம், நீதி ரஸாயனம் முதலிய பிரத்தியக்ஷ சாஸ்திரங் களும் (இல்லற வாழ்க்கைக்குற்ற நூல்கள்) கன்மநூல்(ஸ்மிருதி, பூர்வமீமாம்ஸை) முதலிய பரோக்ஷசாஸ்திரங்களும் இவ்வட மொழியிற் காணலாம். இத்தகைய பெருமைபெற்ற இப்பாஷை யானது காலதேசத்தாலளவிடப்படாத இகன் பேரணியாகிய வேதத்துடனும் அவ்வேதாங்கங்களாகிய சீட்சை,வியாகரணம் சந்தஸ், நிருக்தம், சோதிடம், கற்பமுதலிய அறுபிரிவினையுள்ள பலவரிய நூல்களுடனும், மஹாகவிகளான் காளிதாஸர், பவ பூதி, தண்டி, பாணன், முதலியவர்களாலியற்றப்பட்டதும், ரா மாயணம் மஹாபாரதம்முதலிய இதிஹாஸபுராணங்களுடனும், நவரஸங்கள் நன்கு ஆங்காங்கு பொருந்தியதுமான காவ்யநாட கங்களுடனும், மற்றும் தர்மசாஸ்திரம், நியாயம், வேதாந்தம் முதலான முக்திசாதனங்களுக்குற்ற சாஸ்திரங்களுடனும் எக் காலம் இப்பாதகண்டமெனப்பெயர்வழங்கும் இந்துதேசத்தில் எல்லா வர்ணஸ்தரும் ஆதரிக்கப்பதம்பெற்று எங்கும் தழைத் தோங்கி செழித்து வழங்கியதோ அக்காலம் நமது தேச நட வடிக்கைகளெல்லாம் இப்பாஷையைக்கொண்டே நடந்துவந் தன. பின்னர் இவ்விந்தியதேசத்தை சமீப ராஜ்யாதிபதிக ளான சிற்சில மன்னர்கள் ஆளத்தலைப்பட்டு ஜனங்களை சஞ்சா ரத்தினின்றும் தடுத்து தத்தம் பாஷையைக் கொண்டே வேலை யை முடித்து வந்ததினாலும் இப்பாஷை கற்பவருக்குப்பிழைப்

யில்லாமை பற்றியும் இதனைக் காலக்கிரமத்தில் ஜனங்கள் விட்டு வேறு பாஷையைக் கற்க முயல்வாராயினர். அக்காலத்திலும் சிலர், ஆசிரியன் பணிவிடை செய்து அரிதாய் இம்மாதிருபாஷையை ஆதரித்துயிர்ப்பித்து வந்தனர்.

இத்தகைய புராதன இந்துக்களின் பெருந்தன்மையான எண்ணங்களும், உயர்ந்த மேன்மையான அவாக்களும் நிறைந்துள்ள இவ்வடமொழியானது தற்காலம் உலகத்தில் விசேஷ வழக்கத்திலில்லாத காரணபபற்றி அஃது "இறந்த பாஷை" (The dead Language) எனவ்யவகரிககப்படுகின்றது. இப்பேற்கொற்ற இந்த ஸம்ஸ்கிருத பாஷையை உயிர்ப்பிக்கவேண்டுமென்ற ஒரு விசேஷ விருப்பம் ஸமீபத்தில் பலர் உள்ளத்தில் தோன்றியிருப்பதாய் நாம் காண்கின்றோம். மிக ஸந்தோஷத்தையும், மனதிருப்தியையும் கொடுக்கக்கூடிய இவ்வெண்ணமானது இப்பொழுது உண்டாவதின் முகாந்திரம் யாதெனில் அஃது, மிக நாகரீக மேம்பாடடைந்து பொது ஜனங்களின் நன்மையைக்கருதி, சாஸ்திரசம்பந்தமான—(Scienfitic) கல்வியைத் தங்களா லியன்றமட்டும் விருத்திக்குக் கொண்டுவந்து கொண்டிருக்கும் மேநாட்டாரின் விடாமுயற்சியே யல்லாது வேறில்லை. மிருதியான கல்விக்கும், யோகம் முதலிய சாஸ்திரங்களையப்பியஸிப்பதற்கும் உற்ற இடமாயிருந்த நமது இந்திய நாட்டில் இப்பொழுது ஸம்ஸ்கிருத பாஷையை உஜ்ஜீவனம் செய்ய ஸமீபததிலிருந்த ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதியைப போலொற்ற சீர்திருத்தக்காரர்களை முக்கியகாரணமாய்க் கூறலாம். ஆனால் அவ்வன்னோர் சென்ற மார்க்கமே நன்குபின்பற்றி அவருடைய நன் முயற்சிகளை பயன்படச்செய்யாமற்போனது நமக்கு மிக்க வருத்தத்தையுண்டுபண்ணுகிறது. தியஸாபிக்ஸ் ஸொஸைடியாரும் (Theosophical society) மற்றெவ்விஷயங்களெவ்வாறு இருப்பினும் ஸம்ஸ்கிருதபாஷையை உயிர்ப்பிக்கும்பொருட்டு தக்கமுயற்சிகள் செய்வதைப் பார்க்கச் சந்தோஷமடைகின்றோம்.

ஸம்ஸ்கிருதத்தின் சிலாக்கியத்தையும் காம்பீர்யத்தையும் இங்கெடுத்துக்கூற வேண்டுவது அனுவசியம். அப்பாஷையிலிருக்கும் செழிப்பும் பிரபாவமும் அறியாதவர் எவர்? அதன் வாசகத்தினழகும், வாக்கியங்களினமைப்பும், அதைக்கேட்பதினுலுண்டாகும் இன்னிசையும், புராதனம் முதல் அதிலிருக்கும் அளவற்ற சிறப்பும் அறியாத மூடர்களும் இவ்வுலகிலுளரோ? ஆகவே இந்துக்களும் ஒரு ஜாதியாரென்று கூறுவதற்கு ஸம்ஸ்கிருதத்திஞலுண்டாயிருக்கும் பாத்தியங்களைப் பற்றி சுருக்கமாய்க் கூறுவோம். முதன் முதலில் இந்தியாவிலுள்ள பற்பல ஜாதியார்கள் அனைவரையும் ஒன்றுசேர்த்து இவர்களெல்லாரும் இந்துக்கள் என்று பந்தம் செய்வது ஸம்ஸ்கிருதமே. இந்துக்களுக்குள்ள ஒவ்வொரு ஜாதியாருக்கும் ஒரு கீல் போலிருப்பதும் ஸம்ஸ்கிருதமே. ஒரு நாட்டிலுள்ள பாஷைக்கும் மற்றொரு நாட்டிலுள்ள பாஷைக்கும் சிறிதும் சம்பந்தமற்றும், ஒருவருக்கொருவர் தெரிந்துகொள்ளமுடியாததுமான பல்வேறு பாஷைகள் பற்பல தேசங்களில் ஆங்காங்கு பேசப்படினும் இவைகளுக்கெல்லாம் பொதுவானதும் தாய் பாஷையாயுள்ளதும், ஸம்ஸ்கிருதபாஷையே. அது இன்னும் சிறிது காலத்தில், இந்தியா முழுதும் பேசும் பாஷையாய் விடுமென்று நம்புகின்றோம். இவ்வளவு தாழ்மையான நிலைக்குத்தற்காலம் நமது நாடானது வந்துற்றபோதிலும், இந்துமதாசாரங்கள், சடங்குகள், முதலியவற்றைச் செவ்வனே நடத்துவதற்கு இன்றியமையாததான ஸம்ஸ்கிருதத்தை மாத்திரமாவது படித்திருந்த ஒரு பிராமணன்கூடவில்லாத கிராமம் கிடையாது. இரண்டாவதாக ஸம்ஸ்கிருதப் பயிற்சியில்லாமல் இந்துக்களின் மதச்சீர்திருத்தம் செய்வோமென்பது அசாத்தியம். அநாதியானதும், மாசற்றதுமான வேதங்களும் மற்றுமுள்ள மதசம்பந்தமான அரிய நூல்களும் ஸம்ஸ்கிருதத்திலேயே யெழுதப்பட்டுள்ளனவாதலால், ஒருவன் ஸம்ஸ்கிருதம் தெரியாத இந்துவென்றால், அவனுக்குத்தான் அனுஷ்டிக்கும் மதம் தெரியாதென்பதில் சந்தேகம் யாது? இக்குறைவானது அவன் மதத்திற்கு ஓர் பெரும்

கேடன்றோ! ஆகவே ஒவ்வொரு இந்துவும் தன் மதத்தின் ஆதார நூல்களை மட்டுமாவது அறிந்திருப்பதுடன் அவன் செய்யவேண்டிய கடமைகளை செவ்வனே தெறிந்துகொள்வதற்கு ஸம்ஸ்கிருத ஞானம் இன்றியமையாததாகும்.

(இன்னும் வரும்).

தானம்

नोपसेतऽन्नैःपुरुषोत्तमं ये ध्यानेन ते विष्णुपदं गताश्चेत् ।
रुदन्ति तृष्णाहितक्षुधार्तास्साथने विधातुः किल कर्मकेलिः ॥

எவர்கள் திருமாலை நைவேதனங்களால் உபாஸிக்கவில்லையோ அவர்கள் தியானயோகத்தால் வைகுண்டத்தை அடைந்தாலும் தாகத்தாலும் பசியாலும் துன்பப்படுகிறார்கள். பிர்மதேவனுடைய கர்மாவின் விளையாட்டானது உசிதமன்றோ.

தானம் என்னும் சொற்றொடர் தமக்குச்சொந்தமான திரவியங்களைப் பிறருக்கு அதீனமாக்குவதெனப்பொருளை உணர்த்தும். அதனை இழக்காது அன்புடன் செய்துளோர் இம்மையிலும் மறுமையிலும் பெரிதும் சுகம் பெறுவார். தானமே மனிதருக்குச் சிறந்த அரியதோர் அணியாகும். அதுகொண்டே ஓர் நூலாசிரியர் யாசகர்களுக்காக ஏராளமான பொருள்களை மிகத் தாராளமாகச்சிலவழித்து அதனால் செல்வ முழுதுமிழந்துளோர் ஏழ்மைத்தன்மையை வகிப்பதுமோர் அழகாகும் எனக்கருத்துடைய,

तनिम्ना शोभन्ते गलितविभवाश्चार्थिषु नृपाः ।

என்ற ச்லோகத்தைக் கூறியுள்ளார். இவ்வாறே காளிதாஸரும்,

स्थाने भवानेकनराधिपस्सन्नकिंचनत्वं मखजं व्यनक्ति ।
पर्यायपीतस्य सुरैर्हिमांशोः कलाक्षयश्श्लाघ्यतरो हि वृद्धेः ॥

என்ற ச்லோகத்தைத் தன்னுளியற்றப்பெற்ற ரகுவம்சமென்னும் நூலில் கூறியிருக்கிறார். மற்றும் ஓர் நூலாசிரியர்,

दृढतर निबद्धमुष्टेः कोशनिषण्णस्य सहजमलिनस्य।
कृपणस्य कृपाणस्य च केवलमाकारतो भेदः ॥

என்னும் ச்லோகத்தால் தானம் செய்யாமல் உலோபத்தை வகிக்கும் மனிதரை கட்கத்திற்கு ஒப்பாகக்கூறியுள்ளார். அதாவது கட்கம் பலமாகப் பிடிக்கப்பெற்ற முஷ்டியை உடையதாயிருக்கின்றது. கிருபணனும் தன் முஷ்டியால் கெட்டியாகப் பணங்களை மூடிக்கொண்டு இருக்கிறான். கட்கம் எப்பொழுதும் (கோசத்தில்) உரையிலிருந்துகொண்டு இருக்கும். கிருபணனும் தனங்களைக் (கோசத்தில்) கஜானாவில் வைத்திருப்பான். கட்கம் எப்பொழுதும் உரையோடு இருப்பதால் துருப்பிடித்திருக்கும். கிருபணனும் யாசகர்களுக்குப் பணங்களைக் கொடுக்காததால் உலகத்தார் கூறும் கிருபணனென்னும் மைடலைக்கேட்டு அகங்கருத்து இருப்பான். ஆகையால் கிருபணனுக்கும் கிருபாணத்திற்கும் ஆகாரத்தினுற்றான் பேதம். எனவே கட்கமானது எவ்விதந்தன்னை அடைந்தவர்களைச்சங்கரிக்கின்றதோ அவ்விதமே கிருபணர்களான பிரபுக்களும் தம்மை அடைந்த யாசகர்களைக் கடுமைச்சொற்களால் சங்கரிக்கின்றனர். பெரும்பாலும் பிரபுக்களிடம் யாசிக்கும் யாசகர்கள்,

निद्राति स्नाति भुङ्क्ते चलति कचभरं शोषयत्यन्तरास्ते
दीव्यत्यक्षैर्नचायंगदितुमवसरो भूय आयाहि याहि।
इत्युद्दण्डैः प्रभूणामसकृदधि कृतैर्वारिता न्द्वारि दीना
नस्मान्पश्याब्धिकन्ये सरसिरुहरुचामन्तरङ्गैरपाङ्गैः ॥

என்றோர் கவி கூறியவண்ணம் சய்யா கிருஹத்தில் பிரபு நித்திரை செய்துகொண்டு இருக்கிறார், இப்பொழுது ஸ்நானம் செய்யும் ஸமயம், இது புசிக்கும் வேளை, பிரபு தன் கூந்தல்களைவிரித்து உலர்த்திக்கொண்டுஇருக்கிறார், யஜமானர் உள்ளே

இருக்கிறார், இது சீட்டாடும் சமயம், பிரபு பேசுகிற ஸமயம், இல்தன்று, மற்றொரு தடவைவா அடா உனக்கென்ன வேலை இல்லையா போடா என்று இவ்விதமாகப் பிரபுக்களின் அரண்ம ஊ வாசலிலேயே தடுக்கப்படுகின்றனர். யாசகர்கள் பிரபுக்க ளிடம் யாசிக்க வருங்கால் வெட்கத்தாலும் வருத்தத்தாலும் துன்பப்படும் தம்மனதைத் தாமாகவே தேற்றிக்கொண்டு யா சிக்குங்கால் இவ்வித வார்த்தைகளைக் கூறினால் அவர்கள் எவ் வித துன்பத்தை அனுபவிப்பார்கள் அதுகொண்டே காளிதா ஸர் மூர்க்கனிடம் யாசித்து அவன் கொடுப்பதைக் காட்டிலும் உத்தமனிடம் யாசித்து வீணாகப்போவது நலமெனக் கருத் துடைய,

याञ्चा मोघा वरमधिगुणे नाधमे लब्धकामा ।

என்னுமோர் ச்லோகத்தைக் கூறியுள்ளார். ஆகாயத்தில் சஞ் சரிக்கும் மேகங்கள் தாம் கடலிலிருந்து நீர்களை உண்டு காடு மலை வனவனாந்திரங்களிலும் வாபீ கூப தடாகங்கங்களிலும் நீர் வளம் நிலவளம் செழித்தோங்க வர்ஷத்தை தாரையாக வர் ஷிக்கின்றன. அவைகளைக் கண்ணுற்றுவது நாம்சம்பாதிப்பதை தானத்தின்பொருட்டு உபயோகப்படுத்தலாகாதா? இவ்விஷய மானது காளிதாஸராலும்,

आदानंहि विसर्गाय सतां वारिमुचामिव ।

என்னும் சலோகத்தால் நன்கு விளக்கப் பெற்றிருக்கின்றது. கர்பசீமான்கள் யாசகர்களுக்குக் கொடையளிக்காமலிருத்தலா னது இம்மையில் கிருபணனென்னும் பெயரை விளைவிப்பதுட ன் மறுமையில் விதியின்பயனை அனுபவிக்கின்றனர். குறித்த தா னமானது அவ்வப்பொருள்களின் விசேஷங்களால் அன்னதா னம், கன்னிகாதானமெனப் பலவகைப்படும். அவற்றுள் அன் னமே ஜீவராசிகள் ஜீவாதாரமானதால் அன்னதானமே சிறந்த தாகும் அத்தகைய தானத்தை இழந்த பத்மபுராணத்திற் கூறியிருக்கும் சுபாகுவென்னும் ஓர் வேந்தனின் சரித்திரத்தை இங்கு விவரிப்போம்.

தந்தையான குஞ்சலனென்ற கிளியானது. தன்னுடைய மூன்றுவது குமாரனுகிய விஜ்வலனே நோக்கி, குழந்தாய் விஜ்வலா! இன்று எனக்கு அமுதளிக்கும் பொருட்டு எங்கு சென்றனே? அங்கு விசித்ரமான விசேஷமேதேனும் நடைபெற்றதா? எனவே விஜ்வலன் தன் பிதாவின் மலரடியிற் சிரஸைச்சாய்த்து ஏற்றிப்போற்றிக் கூறுவதாவது.—

கேண்மின் எனதன்னே தந்தையரே! அன்புள்ள சகோதரர்களே! யான் இற்றைத்தினம் காடுமலே கடந்து கடைசியாக மஹாமேருவின் பின்பாலிருக்கும் ஆனந்தமென்ற வனத்திற்குச் சென்றிருந்தேன். அவ்வனமானது அளவிறந்த அருசுவையான பழவகைகளுற்ற பசுமையான விருட்சங்களால் வெகு நேர்த்தியாகவிருந்தது. தேவர்களும் முனிவரும் ஸித்தர்களும் குடிகொண்டிருந்தனர். வாபிகூபதடாகங்களாலும் குளங்களாலும் அறிவிகளாலும் இம்பரும்பர்களின் ஹிருதய கமலங்கள் ஸதா மலர்ந்துகொண்டு இருந்தன. இவ்விதம் பெயரை குணங்களாலேயே உண்மைப்பொருளாகச் செய்யுமக்கானகத்தின் மத்தியில் நிர் மலமான தடாக மொன்றிருக்கிறது. அத்தடாகத்தில் எண்ணிறந்த விமானங்கள் எக்காலத்திலு முலாவி வருகின்றன- வண்டினங்கள் புட்பங்களின் மதுவைப்பானம் செய்யும் வண்ணம் ரீங்காரசப்தத்துடன் இங்குமங்கு மோடுகின்றன செவியுற்ற நாதங்களெல்லாம் நாகாங்கனேகளின் கானங்களேயன்றி காடிபுலிகளின் சப்தங்களன்று. கோகிலம் முதலிய பட்சிகளின் பாடல்கள் மிகக்கோலாகலமாய் இருந்தன. புண்யதீர்த்தங்களால் பரிபூரணமான அத்தடாகத்தை வடிவத்தில் சமுத்திரத்திற்கு ஒப்பாகக்கூறலாம். ஹம்ஸம் காரண்டவம் முதலிய நீர்பட்சிகள் ஜலத்தில் நீந்துவது மிகவும் வியக்கத்தக்கது. இவ்வழகு பெற்ற தடாகத்தில் திவ்யபுருஷனெருவன் தன்காதலியுடன் விமானத்திலிருந் திறங்கினன். அவ் விமானமானது திவ்யபோகங்களால் பரிபூர்ணமா யுள்ளது. அவன் சத்ரம், தண்டம் பதாகை, முதலிய ராஜசின்னங்களால்

மன்னுதி மன்னனாகத்தோற்றுகிறான். கின்னர ஸ்திரீகளும் கந்தர்வர்களும் அவனைச்சுற்றி வெகு மதுரமாக கானம் செய்கின்றனர். அப்ஸரசுகளின் அளவிறந்த நர்த்தனங்களின் விநோதங்களை நவில இறைவனாலுமியலாது. உண்மைப்பொருளை அறிந்த முனிவரும் சித்தரும், அவனை யேற்றிப் போற்றுகின்றனர். நவரத்னங்களால் இழைக்கப்பெற்ற ஓர் மாலையானது அவன் கழுத்தில் ஜாஜ்வல்யமானமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இவனுக்கு நிகராக வேறு ஒருவனையும் யான் பார்த்ததில்லை. இவ்வாறு அழகுபெற்ற மன்னவனின் பக்கத்தில் தன் ரூபலாவண்யத்தால் ஆயிரம் ரதிகளையும் கூட அலக்ஷியம் செய்கிற ஓர் பூங்கொடி நின்றுகொண்டு இருப்பதையும் கண்டேன். அவள் தன் காதலரின் பிரேமா திசயத்திற்கு பாத்ரமாக விளங்கினாள். அவ்விருவரும் வெகுவிரைவாக விமானத்திலிருந்து இறங்கி தடாகத்தில் ஸ்னானம் செய்தபின்னர் தடாகத்திலிருந்து இரண்டு பிணங்களை ஆயுதத்தால் அறுத்துத்தின்று பிணியை ஆற்றிக்கொண்டார்கள். அவ்விருபிணங்களும் விமானத்திலிருந் திறங்கிய ஸ்திரீ புமான்களின் பிரதிபிம்பங்களோவென்த்தோன்றும்படியாக இருந்தன. முறையே புருஷன் புருஷசவத்தையும் ஸ்திரீ, ஸ்திரீசவத்தை யுமறுத்துத்தின்று பசியை நிவர்த்தி செய்துகொண்டனர். இவ்விநோதத்தைப்பார்த்து வேறு இரண்டு ஸ்திரீகள் அட்டஹாஸம் செய்து நகைத்துக் கொண்டிருந்தார்கள். வேறு இரண்டு ஸ்திரீகள் விமானத்திலிருந்து இறங்கிய ஸ்திரீ புமான்கள் பிணங்களைத்தின்றுகொண்டிருக்கும்பொழுது "எனக்குக் கொஞ்சம் தா? எனக்கு கொஞ்சம் தா? என்று அலரிக்கெஞ்சிக் கூத்தாடிக்கொண்டிருந்தார்கள். இவ்விதமே விமானத்திலிருந்து ஸ்திரீபுமான்கள் ஒவ்வொருநாளும் இறங்குவதும் பிணங்களைத்தின்பதும், இரண்டுபெண்கள் நகைப்பதும், வேறு இரண்டு பெண்கள் தா? தா? வென்று கெஞ்சுவதுமாக விருக்கின்றது. ஆதலால் முக்காலங்களையுமறிந்த முக்தரான தாங்கள் இவைகளை நன்கு விளக்க வேண்டுமெனக்குஞ்சல் கூறுவதாவது:—

கேண்மின் என் அருமைக்குஞ்சுகளே? இவ்வுலகானது கர்மலோகமாதலின் நாம் கிரியைகளை மாத்ரம் செய்யக்கடமைப்பட்டிருக்கிறோம். நாம் செய்யும், ஒவ்வொரு கர்மாக்களின் பலத்தைவிரும்பி க்ரியைகளை அனுஷ்டிக்கலாகாது. அது கொண்டே ப்கவான் கீதையில்

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।

என்று கூறியிருக்கிறார். இவ்வுலகில்செய்யும் கர்மாக்களின் பலத்தை மேலுலகில் நாம் அனுபவிப்போம்.

अन्यदुप्तं जातमन्यदित्ये तन्नोपपद्यते ।

என்று மநு கூறியவண்ணம் "அவரை விதைத்தால் துவரை முளைக்காது" அதுபோல் புண்யா புண்யங்களுக்குத் தக்கபலத்தையே அடைவோம். நமக்கு பந்துக்களாயும் சகோதரர்களாயும் அன்பர்களாயும் நாம் செய்யும் கர்மாக்களே இருக்கின்றன கர்மாவே மனிதரை சுக துக்கங்களில் ஏவுகின்றது. புத்தியின் சாதுர்யத்தினால் வேதங்களை அலட்சியம் செய்யலாகாது. கர்மயோகமே ஞானயோகத்தை அடைவதற்குரிய சரியான மார்க்கம் கர்மயோகத்தை அனுஷ்டியாமல் ஞானயோகத்தை அடைதலானது அஸ்திவாரமற்ற சுவர்போல் பயனற்றுப்போய் விடும். சோளதேசத்தில் சுபாகு என்னுமோர் அரசன் அறநெறி தவறாது அரசியல் புரிந்து வந்தனன். அவன் மிகவும் புத்திசாலி, ரூபலாவண்ய முள்ளவன் நற்குணங்கள் வாய்ந்தவன் மஹாதீரன் அவனுக்கு நிகராக ஒருவனையும் சொல்லமுடியாது. விஷ்ணுபக்தியில் சிறந்தவன் மஹாஞானீ விஷ்ணுபாகவதர்களுக்குப் பிரியகரமாயுள்ளவன். சரீரா யாஸரூபமான கர்மாக்களால் தினந்தோறும் திருமலைத் தொழுவதுண்டு. விதிவழுவாது அச்வமேதம் முதலியயாகங்களைச் செய்வான். இவ்விதம் சிறப்புவாய்ந்த மன்னவனுக்கு ஜைமினி என்னும் விப்ரச்ரேஷ்டரொருவர் குல பரம்பரையாகப் புரோகிதராய் இருந்து வந்தார்

ஒரு நாள் அரசனை ஜைமினியை அடைந்து ஓ மனு நீதி தவறா து மாநில வாழும் மன்னவா! தர்மசாஸ்திரங்களுள் சிறந்த தானங்கள் கூறப் பட்டிருக்கின்றன. அவைகளே மேன்மைப் பதவிக்கு உபகாரங்களாயுள்ளன.

ஆகையால் தாங்கள் அவைகளை அநுஷ்டிக்க வேண்டும். தங்களிடம் எல்லா குணங்களிருந்தும் அம்புலியின் களங்கம் போல் கொடையின்மையென்னும் மோர் களங்கமிருக்கின்றது. அதனைத் துலக்க வழிபார்க்க வேண்டுமென்றார். அரசன் அதற்கு இணங்காது பான்ஸ்வர்களை விரும்பினவனல்லன். தியான யோகத்தால் திருமாலின் பரமபதத்தை அடைகிறேன். என்றான். அதன் பின்னர் புரோகிதர் ஓ மன்னவா? ஒரு அந்தணரை அன்னபானாதிகளால் இவ்வுலகத்தில் திருப்தி செய்வித்தால் கொடையளித்தவர் பசிதாக மற்று பரமபதத்தில் சுகம் பெறுவார். இல்லையேல் தியான யோகத்தால் பரமபதத்தை அடைந்தாலும் பசி தாகத்தால் துன்பப் படுவான். ஆதலால் என் வார்த்தையைக் கொஞ்சம் பொருட்டாக பாவிக்க வேண்டுமென்று எவ்வளவோ சொல்லியும் அவ்வார்த்தைகள் பயனற்றுப் போயின. (தொடரும்)

கே. எம். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

பாதிவ்ரத்யம்.

(௩௫௫-வது பக்கத்தொடர்ச்சி.)

ஓ புண்ணியவான்களே! யான் என்னென்று சொல்வேன். காளைப்பருவத்தில் மதோன்மத்தனாயிருந்துகொண்டு புணரக் கூடாத ஸ்திரீகளைப் புணருவதாலுண்டான கொடும் பாபத்தால் தகிக்கப்பட்டு ஒன்றுமறியாமல் பூமியில் சுற்றிசுற்றி பிரமித்துக்கொண்டிருக்கிறேன். ஆகையால் தங்களையே தஞ்சமடைந்தேனெனக் கூறியதும், வஞ்சகனென்ற ஓர் வைச்யன் கள்ளருந்தல், பசுக்களைக் கொல்லுதல் இவைகளைச்செய்ததால் பொருக்கமுடியாத துக்கத்துடன் அதேவிருட்சத்தை யடைந்தனன். ஆகவே ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் தத்தம்

வாலாற்றைக் கூறிக்கொண்டு ஓரேவிடத்தில் உட்காராத்தோன்ருமலும், ஆகாரங்களைப்புசிக்க மனமில்லாமலும், படுக்கையில் நித்திரைசெய்யாமலுமிருந்து கடைசியில் காலஞ்சரமென்னும் பெயருடைய ஓர் பர்வதத்தை நோக்கிச் சென்றனர். அங்கு சென்றதும் ஓர் ஸித்தரின் அனுக்ரஹத்தால் பிரயாகை, புட்காம், ஸர்வதீர்த்தம், வாராணஸி, இந்நான்கு தீர்த்தங்களிலும் சென்று ஸ்நானஞ்செய்து பாபத்தை நிவர்த்திசெய்து கொண்டனர்.

ஆகையால், ஓ என் ஆருயிர் சேய்களே! இந்திரன்செய்த மஹா பாபங்களையும் விதூரன் முதலியவரின் மஹா பாபங்களையும் தாம் ஸஹிக்க சக்தியற்ற பிரயாகை முதலிய நான்கு தீர்த்தங்களும் ஹம்ஸரூபங்கொண்டு ரேவாநதியின் சங்கமத்தில் ஸ்நானம் செய்து தங்கள் பாபத்தை விலக்கிக்கொண்டன. விதூரன் முதலியவரின் பாபங்களே பெண் ஹம்ஸங்கள். அதலாற்றான் அவைகள் மாண்டுபோயின. அதே ஸங்கமத்தில் வேடன் முதலில், தான் இல்லாளுடன் ஸ்நானம்செய்யாததால் பரமபதத்தை அடையாமல் பிறகு இல்லாளுடன் சேர்ந்து ஸ்நானம் செய்ததால் ஸதா மோட்சலட்சுமியால் அவ்விருவரு மாதரிக்கப்பெற்று வந்தனர். என்று தன் குஞ்சுகளின் சந்தேகத்தைத் தந்தையான குஞ்சலனென்ற கிளியானது தன் அன்பார்ந்த இனிமை மொழிகளால் அற்றுப்போகும்படி செய்தன. என்ற இக்கதை இத்துடன் முற்றிற்று.

ஆகையால் ஓ ஆஸ்திக சிரேஷ்டர்களே! இது கடையுகமாதலால் நம்மால் துறவறத்தால் மோட்சத்தையடைய இயலாதெனினும் இல்லறத்திலிருந்துகொண்டு நம்மால் இயன்றவரை மறையின் ஆக்ஞைக்குட்பட்டு நல்ல கர்மாக்களைச்செய்துவரின் இம்மையிலும் மறுமையிலும் மேன்மைப் பதவியை அடையலாமாதலால் இல்லறத்தை அனுஷ்டித்து வரவேண்டுமென்றும் கோரமான மஹா பாதகங்களைச் செய்யலாகாதெனவும் இக்கதையால் நன்கு விளங்குகிறது.

K. M. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌜𑌮𑍍𑌬𑍂𑌨𑌾𑌥𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌯𑍈 𑌅𑌖𑌿𑌲𑌾𑌣𑍍𑌡𑍇𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃 ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥ ௧ ॥

[illegible] ॥ ௨ ॥

𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌵𑌿𑌧𑌾 𑌗𑍁𑌰𑍁𑌣𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌰𑍍𑌹𑌿
𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌤𑍃𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑌯𑍀 𑌸𑍁𑌕𑍃𑌤𑌾 𑌵𑌿𑌭𑍂𑌷𑌾 ।
𑌯𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 𑌕𑌰𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌲𑍋𑌹𑌿𑌤𑌾𑌨𑌿
𑌰𑌤𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌹𑍋 𑌪𑌰𑌿𑌣𑌤𑌾𑌨𑌿 𑌮𑌹𑌾𑌰𑍍𑌘𑌕𑌾𑌣𑌿 ॥௫॥

𑌶𑍈𑌲𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑌵𑌿𑌹𑌿𑌤𑍋 𑌦𑍁𑌹𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌵𑌾𑌹𑌃
𑌕𑍈𑌲𑌾𑌸𑌵𑌾𑌸𑌿𑌨 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 ।
𑌤𑌾𑌟𑌙𑍍𑌕𑌵𑍇𑌶𑌨𑌮𑌹𑍋𑌤𑍍𑌸𑌵𑌮𑌧𑍍𑌯𑌨𑌿𑌘𑍍𑌨𑌂
𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌 𑌕𑌲𑌯𑌤𑌿 𑌸𑍍𑌮 𑌗𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌯𑌃 ॥௬॥

𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌵𑌿𑌰𑌾𑌜𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇 𑌬𑌹𑍁𑌰𑍂𑌪𑌵𑍇𑌕𑍇 𑌯𑌚𑍍
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌸𑌮𑌮𑌰𑍍𑌜𑍁𑌨𑍇𑌨 ।
𑌨𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑍇𑌤𑌦𑌕𑌰𑍋𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌕𑌕𑍋𑌯𑌚𑍍
𑌤𑌾𑌟𑌙𑍍𑌕𑌧𑌾𑌰𑌣𑌮𑌹𑍋𑌤𑍍𑌸𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑌜𑌾𑌤𑌮𑍍 ॥௭॥

𑌤𑌾𑌟𑌙𑍍𑌕𑌮𑌾𑌦𑌿𑌜𑌨𑌨𑍀𑌶𑍍𑌰𑌵𑌸𑍋𑌸𑍍𑌸𑌮𑌰𑍍𑌪𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌤𑍃𑌕𑌾𑌙𑍍𑌕𑌮𑌯𑌿𑌕𑌂 𑌗𑍁𑌰𑍁𑌰𑌾𑌬𑌭𑌾𑌤𑌿 ।
[illegible]
[illegible] ॥௮॥

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌕𑌵𑌿𑌵𑌿𑌰𑌚𑌿𑌤 [illegible] ॥ ॥௯॥

𑌇𑌤𑍍𑌥𑌂 [illegible] ॥

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌕𑌵𑌿𑌃 ॥

உ

சிவமயம்

திருவானைக்காவல்

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியம்மைக்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியாகிய

ஸ்ரீமத்கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள்

ருதிரோத்காரி ௵ சித்திரை௴ 17ம் தேதி பானுவாரம் செய்த

தாடங்கப்பிரதிஷ்டா காலத்தில்

"நாகை நீலலோசனி" பத்திராதிபர் சமர்ப்பித்த

வாழ்த்துப்பாக்கள்.

மதிமணக்குஞ் செஞ்சடையும்மான்மணக்குங்,காதலமும்மறைத்தேயிந்த
நிதிமணக்கும் ஜகத்குருவாய் நீணிலத்தில் வந்தருளும் நிமல மூர்த்தி
கதிமணக்குந் திருவானைக் காவுரையுங் கன்னிகைதன் காதிற் பூணுந்
துதிமணக்குந் தாடங்கந் தாபித்தே உலகமெலாந் துதிகொண்டாரே

அகிலமெலா மீன்றவன்னை யகிலாண்டேஸ்வரி தவத்தி னதிவே கத்தை
தகைமைபெறத் தணிவித்தே சாந்தகுண ரூபியாய்த் தழைக்கச் செய்த
மகிமைதனைக் காணுங்கால் மகாதைவ மிவரன்றி மற்று முண்டோ
சககுருவாம் சங்கரா சாரியரின் தாளிணைகள் தழைத்து வாழி

மும்மூர்த்தியே யுலகின் முதல் யென்றுரைப்பார் முதுமை யாளர்
அம்மூர்த்தி யாவரையும் அருள்மூர்த்தி யாக்குவிக்கு மதிசயத் தால்
எம்மூர்த்தி தங்களுக்கும் குருமூர்த்தி யேற்றமென வியம்பலாகும்
நம்மூர்த்தி ஜகத்குரு சங்கரமூர்த்தி நாடோறும் ஞாலம் வாழி.

மந்திரங்க ளெழுகோடி வளர்மூர்த்தி மகாதலங்கள் வளருந் தேவ
யந்திரஸ்தா பனமூர்த்தி யதீஸ்வரருக் கரசாக வமர்ந்த மூர்த்தி
சுந்தரஞ்சேர், நன்மூர்த்தி தூகிஜகத் குருமூர்த்தி சுகுணமூர்த்தி
சந்தரமவு லீசுரர்தம் தாட்பூஜை செயும் மூர்த்தி தரணி வாழி.

தேடங்க மாமறையுந் தேடரிய வகிலாண்டே ஸ்வரிதன் காதில்
தாடங்கந் தாபித்தார் ஜகத்குருசங் கரரென்ற சாற்றலாகும்
தோடங்க ளிலாருத்ரோற் காரிசித் திரைதிகதி தொடர்பன் னேழில்
நாடெங்கு மொளிற்பானு நாட்காண் மிதுனலெக் கினத்தில் மாதோ.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

நாகை.
29-3-23

இங்ஙனம்
சதாசிவம்;